DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.21/2018**

அ.சா.8

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கருப்பையா | Caste: | |
| Father's Name: | காளிமுத்து | Calling: | விவசாயம் |
| Village: | ஏஆர் மங்களம் | Religion: | |
| Taluk: | திருவாடானை | Age: | 54 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 22.10.2025

( எதிரிகள் ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் திருவாடானை தாலுகாவில் உள்ள ஏஆர் மங்களம் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 சோனைமுத்துவை தெரியும். அ.சா.6 தர்மலிங்கத்தை தெரியும். அ.சா.1 சோனைமுத்து கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகளை தெரியும். கடந்த 17.01.2017 ம் தேதி சிவகங்கை பேருந்து நிலையத்தில் நானும் எனது நண்பர் தர்மலிங்கமும் மதியம் 1.30 மணியளவில் நின்றுகொண்டிருந்தோம். அப்போது திருவாடனை உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் எனக்கு ஏற்கனவே தெரிந்த எதிரிகள் திரானி சண்முகம், சேந்தனி கிராமத்தை சேர்ந்த இராமன் ஆகிய இருவரையும் விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது பக்கத்தில் நாங்கள் நின்று கொண்டிருந்தோம். விசாரித்ததற்கு சாட்சியாக எங்கள் இருவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். நானும்

தர்மலிங்கமும் கையெழுத்து போட்டோம். அவர்கள் இருவரும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சோனைமுத்துவை அடிக்க பயன்படுத்திய கம்பியை மறைத்து வைத்திருக்கும் இடத்தை காண்பிக்கிறோம் என கூறி திருவாடானை –காளையார்கோவில் ரோட்டில் பாளையனேந்தல் விலக்கிற்கு அருகே உள்ள பாலத்திற்கு அடியில் வைத்திருந்த கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தும் இரும்பு ராடை எடுத்து ஆஜர் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் இரும்பு ராடுகள்தான் அந்த ராடுகள். ராமன், திரானி சண்முகமும்தான் எடுத்து ஒப்படைத்தார்கள். அப்போது மணி மதியம் 2.45 இருக்கும். அதே இடத்தில் டிஎஸ்பி எங்கள் இருவரிடமும் ஒரு கையெழுத்து வாங்கினார். ஒப்புதல் வாக்குமுலத்தில் உள்ள முதல் கையெழுத்து என் கையெழுத்துதான். 2 வது கையெழுத்து தர்மலிங்கத்துடையது. சாட்சியின் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ. 6**. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.7.**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

அ.சா.1 சோனைமுத்துவுக்கு நான் சித்தப்பா என்றால் சரிதான். என் ஊருக்கு அருகில் உள்ள பெரிய ஊர் இராமநாதபுரம். பொருட்கள் வாங்குவதற்கு அங்குதான் செல்லவேண்டும் என்றால் சரியல்ல. ஆர் எஸ் மங்களம் செல்லலாம். சிவகங்கைக்கு எங்கிருந்து சென்றோம் என்றால் திருவாடானையிலிருந்து சென்றோம். எதற்காக சென்றோம் என்றால் சொந்த வேலையாக சென்றோம். சிவகங்கை பஸ்ஸ்டாப்பில் நிறைய கடைகள் உள்ளன என்றால் சரிதான். சிவகங்கை பேருந்து

நிலையத்திலிருந்து பல ஊர்களுக்கு பேருந்துகள் செல்லும் என்றால் சரிதான். அங்கு மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். சிவகங்கை பேருந்து நிலையத்தில் இருந்த மற்ற பொதுமக்களை போலிசார் சாட்சியாக அழைக்கவில்லை என்றால் சரிதான். பானையனேந்தல் விலக்கு என்பது திருவாடானையிலிருந்து காளையார்கோவில் செல்லும் ரோட்டிற்கு தெற்கு நோக்கி பிரிந்து செல்கிறது என்றால் சரிதான். அந்த விலக்கிற்கு அருகில் தற்போதும் உயர்நிலைப்பள்ளி உள்ளது என்றால் சரிதான். அந்த பள்ளி அருகே பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் பள்ளி நேரத்தில் மட்டும்தான் இருக்கும். எதிரிகள் சண்முகம், ராமன் இரும்பு கம்பிகளை எடுத்து ஆஜர் செய்யும்போது அங்கிருந்த பொதுமக்களை போலிசார் சாட்சிகளா சேர்க்கவில்லை என்றால் அங்கு யாரும் இல்லை என்பதால் சேர்க்கவில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், இடத்தில் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அதனடிப்படையில் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் அ.சா.1 க்கு சித்தப்பா என்பதால் என் முன்னிலையில் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதனடிப்படையில் இரும்பு கம்பிகளை எடுத்து ஆஜர் செய்ததாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கிகொண்டார்கள் என்றும் சோனைமுத்து என் உறவினர் என்பதால்

போலிசார் சொல்லிக்கொடுத்ததன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)